# முதலாம் ஆண்டு நிறைவு அஞ்சலி

## ஆண்டவன் அழைப்பு அன்று நடந்தது!

## ஆண்டு ஒன்று இன்று கடந்தது!!

வல்வை
மண்ணில்
வளர்பிறையாய்
31-05-1942



வந்த
மண்ணில்
உதிர்நிலவாய்
07-01-2011





திதி: 27-12-2011

# அமரர் பழனியாண்டி பஞ்சலிங்கம்

## (கிளியண்ணா)

பெரிய தம்பியார் வல்வையில் சிவாலயம் அமைத்தவர்
பின்வரு தம்பிதான் புலிப் படைதனை படைத்தவன்
அரிய இப் பஞ்சனும் அக் குடிதனில் உதித்தவன்
அச் சிவபுர வீதியில் குடி மனை அமைத்தவன்

இனிமையும் எளிமையும் ஒன்று கலந்திடப் பிறந்தவன்
இளமையில் மெய் கலைகளில் இவன் நன்கு சிறந்தவன்
வலிமைகொள் மாலுமியாக இந்த வையகம் அளந்தவன்
வல்வை நிகழ்வெனில் இவன் இங்கும் வந்து கலந்தவன்

தினம் தினம் தெய்வப் பணி தனில் ஆழ்ந்தவன்
இனத் துயர் களைய தலை மகனை ஈய்ந்தவன்
இனம் படு துயரில் இவனும் ஆழ்ந்து தோய்ந்தவன்
குணம் அதில் குன்றென பிறர் கூற வாழ்ந்தவன்

திரை கடல் ஓடி நற் திரவியம் சேர்த்தவன்
குறை ஏதும் இலாது தன் குடும்பம் பார்த்தவன்
துறை சார் வல்வையை தன் உயிராய் கொண்டவன்
நரை திரை கண்டும் ஓய்வு அது கொண்டிலன்

பாலதை வேண்ட பாற் கடலதை ஈய்ந்தவன்
பாலனை வேண்ட பால முரளியை ஈய்ந்தனன்
வேலவன் வேல் அதன் வேலையை மறந்தனன்
வேழமாம் பாலனோ வெங் களத்தினில் சரிந்தனன்

தன்னிளம் வயதினில் பொது பணியினில் கலந்தவன்
தலை மகன் இழப்பால் தன் உளம் தளர்ந்தனன்
தன்னினம் நிலம் இழக்க மனம் மிக உலைந்தனன்
விண்ணவர் அழைக்க விரி சோதியில் கலந்தனன்

ஆண்டவன் அழைப்பு அன்று நடந்து முடிந்தது
ஆண்டொன்று இன்று எமை கடந்து முடிந்தது
மாண்ட நின் வாழ்வு அது மாண்பு மிகுந்தது
ஈண்டு உன் நினைவெலாம் நெஞ்சினில் பதிந்தது.

**உத்தமராம் உங்களது**
**ஆத்ம சாந்திக்காக ஆத்மார்த்தமாகப் பிரார்த்திப்பது**
ஆருயிர் மனையாள், அருமை மகவுகள், அன்பு மருமக்கள், ஆசைப் பேரர்கள், அருந்தவப் பூட்டன்

கவியாக்கம்
கனக மனோகரன்

**தகவல்:**
மனைவி: திருமதி புவனேஸ்வரி பஞ்சலிங்கம் & குடும்பம்
905-793-6630